IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# ஸ்ரீ குமரகுருபரரின் பக்தியும் பயணங்களும்

**ச. பாலசந்தர்**
முனைவர் பட்ட ஆய்வாளர், (முழு நேரம்), இசைத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**முன்னுரை**

திருப்பனந்தன் காசி மடத்தை தோற்றுவித்த சைவ அருட்குரவர் ஸ்ரீ குமரகுருபரர் அவர்கள் ஐந்தாண்டு அகவை வரை வாய்பேச முடியாமல் இருந்து வந்தார். இதனால் அவரது பெற்றோர் கவலை கொண்டிருந்தனர். அதனால் அருகில் அமைந்த திருச்செந்தூருக்கு சென்று முருக கடவுளிடன் வேண்டுதல் வைத்தனர். முருகனின் அருளால் அவர் பேசும் திறனும், கவிபாடும் திறனும் அமையப்பெற்று அவருடைய வாழ்க்கையும், வளர்ச்சியும் முழுவதுமே வரலாறாக அமையப்பெற்றது.

**ஸ்ரீ குமரகுருபரரின் வாழ்க்கை வரலாற்று சுருக்கம்**

ஒன்பது கைலாசங்களும் ஒன்பது திருப்பதிகளும் தன் கரையில் அமையப்பெற்ற தாமிரபரணியின் வடகரையில் ஸ்ரீ வைகுண்டம்" என்ற வழங்கும் திருப்பதியின் வடபகுதியில் "ஸ்ரீ கைலாசம்" என்ற பகுதி உண்டு. அங்கே பரம்பரையாக தமிழ்ப் புலமையும் முருகக் கடவுளினது பக்தியும் வாய்ந்த சைவ வேளாள குலத்தில் சண்முக சிகாமணி கவிராயர் - சிவகாம சுந்தரி அம்மையார் ஆகிய இருவருக்கும் அருமை ஆண் குழந்தையாக "குமரகுருபரர்" தோன்றி வளர்ந்து வந்தார். அக்குழந்தையானது ஐந்தாண்டு வரையில் பேச்சின்றி ஊமை போல இருந்து வருவதை கண்டு பெற்றோர்கள் கவலையுற்றனர். ஆகவே, குழந்தையை திருச்செந்தூருக்கு அழைத்துச் சென்று செந்திலாண்டவர் சந்நிதியிலே பேச்சு வேண்டி தவம் கிடந்தனர். முருகப் பெருமானின் அருளால் பேசும் ஆற்றல் பெற்று கல்வியிலும் சிறப்புற்றார்.

செந்தில் பெருமான் திருவருளால் வாக்குபெற்ற இவர் அப்பெருமானைப் போற்றி "கந்தர் கலிவெண்பா" என்ற பிரபந்தத்தை இயற்றினார். இவருக்கு "குமாரசுவாமிக் கவிராயர்" என்ற ஒரு தம்பியாரும் இருந்தனர்.

**குமரகுருபரர் அருளிய நூல்கள்**

குமரகுருபரர் அவர்கள், தமிழ் இலக்கண். இலக்கியங்களையும் ஞான சாத்திரங்களையும் திருவருளால் விரைவில் கற்றுத் தேர்ந்தார். "மருவுக்கு வாசனை வாய்தாற்போன்று, பக்தி ஞான வைராக்கியங்கள் இவரிடத்தே உண்டாகி வளரத் தொடங்கின. பின்னர் பல சிவதலங்களுக்கும் சென்று சிவதரிசனம் செய்யத் தொடங்கினார். தம் ஊரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கைலாச நாதர் கடவுளின் மீது "கைலைக் கலம்பகம்" என ஒரு பிரபந்தம் இயற்றினார். மதுரைலே சில காலம் சில காலம் இவர் தங்கியிருந்தார் அப்போது ஸ்ரீ மீனாட்சியம்மையினை போற்றும் விதமாக பிள்ளைத்தமிழ் ஒன்றை இயற்றினார். அதனை அக்காலத்தில் மதுரையை அரசாண்டிருந்த திருமலை நாயக்கரின் முன்னிலையில் அரங்கேற்றினார் "மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை" அரங்கேற்றுகையில் ஸ்ரீ மீனாட்சியம்மையே குழந்தையுருவாக எழுந்தருளி வந்து கேட்டு மகிழ்ந்துனரென்றும், குமரகுருபரர் அவர்கள் "முத்துப்பருவத்தை" அரங்கேற்றிக் கொண்டு இருக்கையில் தம் திருக்கழுத்திலிருந்த முத்து மாலை ஒன்றை எடுத்து இவருக்கு அணிவித்துவிட்டு மறைந்து சென்றார் என்றும் வரலாறு கூறுகின்றது.

இந்தப் பிற்காலத் தமிழைக் கேடட மனமுவந்து திருமலை நாயர்கள் அவர்கள், குமுரகுருபரருக்கு பலவகையான சன்மானங்களை அளித்து வழிபட்டார். குமரகுருபரர் அவர்கள் இன்னும் சிலகாலம் மதுரையிலேயே தங்கி "மதுரைக் கலம்பகம்" என்னும் பிரபந்தத்தை இயற்றினார். பிறகு சோழநாட்டு சிவ ஸ்தலங்களைத் தரிசிக்க வேண்டி பயணம் செய்யலானார். எனவே திருவாரூரை சென்றுடைந்தனர். அங்கே ஸ்ரீ தியாகராஜப் பெருமானை தரிசித்துக் கொண்டு சில காலம் தங்கி இருந்தார். திருவாரூலே தங்கி இருக்கும் போது "திருவாரூர் நான் மணிமாலை" என்னும் பிரபந்தத்தை இயற்றினார்.

**ஞானாசிரியரை தேடுதல்**

சிவஞானம் பெற வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு வரவர அதிகம் ஆகிக் கொண்டிருந்தது. தமக்குரிய ஞான ஆசிரியரை தேடித் தேர்ந்து சரணாகதி அடையவேண்டுமென்று இவர் மனம் ஆவளுற்றது. அக்காலத்தில் திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனத்தில் 4-ம் பட்டத்தில் குருமூர்த்தியாக விளங்கிய "ஸ்ரீ மாசிலாமணி தேசிகர்" அவர்கள் சிவஞானச் செல்வராக இருப்பதை அறிந்து அவரிடம் சென்றார். அங்கே உண்டான சில குறிப்புகளால் இவரே தம்முடைய ஞானாசிரியர் என இவர் உணர்ந்து கொண்டு, தேர்ந்தார். அப்பால், தமக்கு துறவு நிலை அருள வேண்டும் என்று தேசிகரிடத்தில் வேண்டி நின்றார். அப்படி செய்யும் முன் ஸ்தலயாத்திரை செய்து வருவது அவ் வாதீன மரபு ஆகும் ஆதலால் அப்பெரியார் காசி யாத்திரை செய்து வரும்படி கட்டளை இட்டார்.

காசிக்கு சென்று வருவது நெடுங்காலம் செல்லும் என்று கூறிய குருபரரை நோக்கி, சில காலம் சிதம்பரம் வாசமேனும் செய்யும்படி பணிந்து கட்டளை இட்டார். ஆகவே, ஞானாசிரியரின் கட்டளைப்படியே சிதம்பரத்திற்கு இவர் பயணமானார். அப்படி போகும் வழிலேயே ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயிலில் தங்கி தரிசனம் செய்தார். அங்கே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துக் குமாரசாமியை போற்றும் விதமாக ஒரு பிள்ளைத் தமிழை இயற்றினார். பிறகு சிதம்பரம் சென்று ஸ்ரீ நடராஜப் பெருமானை தாசனம் செய்து கொண்டு சில காலம் அங்கே தங்கினார். இக்காலத்தில் "சிதம்பரம் மும்மணிக் கோவை" என்னும் பிரபந்தத்தை இயற்றினார். சிதம்பரம் மும்மணிக் கோவையின் முதல் செய்யுளில், காசிக்கு செல்வதில் உறுவாகும் துன்பங்களையும், சென்று தரிசனம் செய்யும் எளிமையையும் "காசியறைத்த நோக்கி" (451-வது வரியில் பாடியிருக்கின்றார்) என்பது முதலில் அடிகளில் உணர்த்தி இருக்கின்றார். அவ்வடிகளானது, நம்மை ஆசிரியர் காசிக்குச் செல்ல பணிந்ததும் அதன் அருமையை தாம் விண்ணப்பித்துக் கொண்ட போது, சிதம்பர தரிசனம் செய்யும்படி கட்டளை இட்டதுமாகிய நிகழ்ச்சிகளின் நினைவிருந்து எழுந்தன என்றே தோற்றுவிக்கின்றது.

சிவ நேசச் செல்வர்களும் தமிழறிவுடையவர்களுமாகிய, சில அன்பர்கள், "யாப்படுங்கலகாரிகையில் காணப்படும் உதாரணச் செய்யுள்கள் பெரும்பாலும் ஜைன சமயசார்புடையனவாக இருக்கின்றன. ஆகவே அந்நூலின் இலக்கணத்திற்கு உதாரணமாக ஸ்ரீ நடராசப் பெருமானை வேண்டி செய்யுள்களை இயற்றிதர வேண்டும்" என்று வேண்டினர் அங்ஙனமே இவர் "சிதம்பரம் செய்யுட் கோவை" என்னும் பிரபந்தத்தை இயற்றி அளித்தார்.

இவர் சிதம்பரத்தில் தங்கி இருந்த காலத்திலேயே "நீதிநெறி விளக்கம்" என்னும் நீதி நூலை இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்று தோன்றுகின்றது. (இருப்பினும் நாய்க்க மன்னரின் ஆணைக்கிணங்கவும் இயற்றப்பட்டிருக்கலாம் என்றும் சில நூல்களில் காணமுடிகின்றது.

இந்நூலுக்கு சிதம்பர நடராஜப் பெருமானது துதியை முதலில் காப்பாக அமைத்திருத்தல் இதற்கு ஓர் ஆதாரமாகும்.

சிதம்பத்தில் இங்ஙனம் வாழ்ந்து வந்த குமரகுருபரர், பின்பு தம் ஞானதேசிகர் பால் சென்று, தம்முடைய பக்தி வேட்கையை மீண்டும் விண்ணப்பித்து கெண்டார். இவருடைய பரிபக்குவத்தை அறிந்த தேசிகர், இவருக்கு காவி உடையை அணிவித்தார். அதுமுதல் இவர் குமரகுருபர முனிவர் என வழங்கப்பெறுவராயினார். அப்போது தம் ஞான தேசிகரை போற்றும் விதமாக "பண்டார மும்மணிக் கோவை" என்ற பிரபந்தத்தை இயற்றினார்.

**வட நாட்டு பயணம்**

அடுத்ததாக ஞான தேசிகரிடம் விடைபெற்றுக் கொண்டு காசிக்குச் செல்லலானார். அங்கு தம்முடைய கல்வி அறிவினாலும், தவப் பண்பினாலும் டில்லியை ஆளும் பாதுஷாவின் உள்ளத்தை கவர்ந்து நண்பராக ஆனார். ஆனாலும் பாதுஷாவிடமோ அல்லது அங்குள்ள அமைச்சர்களிமோ, மக்களிடமோ உரையாற்ற ஹிந்துஸ்தானிய மொழி தெரிந்திருக்க வேண்டும். ஆனால், நம் குமரபரருக்கு அம்மொழி தெரியாத காரணத்தால், அதை விரைந்து அறிந்து கொள்ள வேண்டும் என்றெண்ணி "சகலகலா வல்லி மாலை" என்னும் பிரபந்தத்தை இயற்றிக் கலைமகளை வேண்டினார். கலைமகளின் திருவருளால் வடமொழியிலே சிறந்த அறிவைப் பெற்று பாதுஷாவிடம் பேசிப் பழகினார்.

குமரகுருபரரின் வேண்டுகோளுக்கிணங்க காசியில் மடம் அமைப்பதற்க்கு "கேதார கட்டத்தில் இடம் தந்து பாதுஷா அவர்கள் உதவினார். ஒரு இந்துக் கடவுளுக்காக ஒரு முகலாய மன்னர் இடம் தருவது என்பது அக்காலத்தில் ஆச்சரியமான ஒன்றாகும். இதற்கெல்லாம் ஸ்ரீ குமரகுருபரரின் பக்தியும், சக்தியுமே காரணம் என்றும் எடுத்துக்கொள்ளலாம். அதுவரை அங்கு மறைக்கப்பட்டிருந்த "ஸ்ரீ விசுவலிங்கப் பெருமானை" வெளிப்படுத்தி அங்கே கோயில் நிருமிக்கச் செய்து நித்திய நைமித்யங்களும் குறைவின்றி நடக்கும்படி ஏற்பாடு செய்தார்.

குமரகுருபர முனிவர் காசியில் தங்கியிருந்த மடத்திற்கு "குமாரசாமி மடம்" என்று பெயராகும். அங்கே இவர் சிவயோகம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் "காசித் துண்டி விநாயகர் பதிகமும்" "காசிக் கலம்பகமும்", இவரால் இயற்றப்பட்டன. இவர், தாம் வாழ்ந்து வந்த மடாலயத்தில் புராண சாலை ஒன்று ஏற்படுத்தி அங்கே ஹிந்துஸ்தானி பாணியிலும் தமிழிலும் புராண பிரசங்கமும் செய்ததுண்டு.

சிறந்த ராம பக்தரான துளஸிதாசர் அவர்கள் அந்த பிரசங்கங்களைக்கேட்டு மகிழ்ந்தார் என்றும், கம்பராமாயணத்திலுள்ள கருத்துகளை தாம் இந்துஸ்தானியில் இயற்றிய ராமாயணத்தில் அமைத்துக் கொண்டார் என்றும் கூறுவர்.

**முடிவுரை**

இவருடைய புலமையும், திறமையும் இவர் இயற்றிய பிரபந்தங்களை கற்பதன் மூலமும், ஆராய்ச்சி செய்வதன் மூலமும் அறிந்து, புரிந்து கொள்ளலாம். குமரகுருபரர், மீண்டும் ஒருமுறை தருமபுரம் வந்து தனது ஞானாசிரியரை தரிசித்து, மீண்டும் காசிக்கே சென்று வாழ்ந்து விளங்கி இருந்து ஒரு வைகாசி மாதத்தில் கிருஷ்ணபக்ஷத் திருதியிலே சிவபெருமான் திருவடி நீழலிற் கலந்தனர்.

**துணை நூல்பட்டியல்**


1. திருவாளர் அட்வகேட் கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L. குமரகுருபர அடிகள் வரலாறும் நூலாராய்ச்சியும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்-1957

2. திரு. தி.சு. பாலசுந்தரம் பிள்ளையவர்கள் (இளவழகனார், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1980.

3. Dr. K.A. பக்கிரிசாமி பாரதி, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, சென்னை, குசேலர் பதிப்பகம், சென்னை-78 - 2002.